தேவனின் அன்பு ஊழியங்கள்

# மங்கள வார்த்தை

GOD'S LOVE MINISTRIES - Vol - I (ISSUE -5) - மாத இதழ் - நவம்பர் 2020



# இ-பத்திரிக்கை உள்ளே...

Page Nos.


**மனம் திறந்து சில வார்த்தைகள்...** – 03
(Bro. T.Stephen, Founder - God's Love Ministries)

**இம்மாத மங்கள வார்த்தை: தயை செய்யும் காலம்!** – 04
(Bro. T.Stephen, Founder, God's Love Ministries)

**துயரில் வாடும் மக்களுக்கு மும்பை ஜெப கோபுரம் ஒரு கலங்கரை விளக்கம்!** – 10
(Sis. Josephin Stephen - Editor "Mangala Vaarthai")

**பெண்கள் பகுதி: அவர் உங்களை விசாரிக்கிறவர்** – 14
(Sis. Josephin Stephen - Editor, "Mangala Vaarthai")

**வேத வினா போட்டி** – 17
(Bible Quiz – Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai")

**ஆண்டவரின் அற்புதங்கள்** – 18
(Testimonies)

**மார்வெல் திருமண தகவல் மையம்** – 20
(Marvel Matrimony)

**சிறுவர்கள் பகுதி: விருப்பங்கள் நிறைவேறுமா?** – 21
(Children's Special) - Sis. Steffy Stephen

**வாலிபர் பகுதி: கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்!** – 23
(Youth Special) - Sis. Bavya Deril

**தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்** – 25
(Schedule of TV Ministry)

**எங்கள் சேவைகள்** – 27



# மனம் திறந்து
## சில வார்த்தைகள்...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

ஆண்டவருடைய பெரிய கிருபையினால், இந்த பொது முடக்க காலத்தில் (Lockdown), கொரோனா நெருக்கத்தில், கழுகு தன் செட்டைகளை விரித்து, தன் குஞ்சுகளை அதன்மேல் வைத்து, சுமந்துகொண்டு செல்வதுபோல அவர் நம்மையும், நம் குடும்பத்தையும், ஊழியத்தையும் ஒரு சேதமும் அணுகாதபடி பாதுகாத்து, தம் தோளில் வைத்து சுமந்து, நடத்திவந்த விதங்களை நினைத்து அடிமை ஆண்டவருக்கு நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 103:1,2).

**"கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்" (உபாகமம் 32:11,12).**

இந்த நவம்பர் மாதத்திலும் ஆண்டவர் எல்லாவிதத்திலும் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், நீங்கள் செய்கிற வேலையில், தொழிலில், வியாபாரத்தில் தயை செய்து (சங்கீதம் 102:13), நிரம்பி வழிகிற ஆசீர்வாதங்களை, அவர் தம் கரத்தினால் ஆசீர்வதித்து உங்கள் குடும்பத்திற்கு கொடுக்கிற மாதமாக இருக்கும்படி நான் கண்ணீரோடு ஜெபித்துள்ளேன்.

ஆம், ஆண்டவர் தம்முடைய கரத்தினால் ஆசீர்வதித்துக் கொடுக்கும்போது, அந்த ஆசீர்வாதம் உங்கள் வாழ்வில், உங்கள் குடும்பத்தில் மென்மேலும் பெருகும் என்பதில் சந்தேகமே இல்லை (மத்தேயு 14:19-21).

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதித்து, வாழ்ந்திருக்கும்படிச் செய்வாராக!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்

**T. ஸ்டீபன்**

தேவனின் அன்பு ஊழியங்கள்



# தயை செய்யும் காலம்!

சகோ.T.ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர – சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

நவம்பர் மாத "மங்கள வார்த்தை" மூலமாக, உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் வீடுகளிலே சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உலகில் எங்கு பார்த்தாலும், எப்பொழுதும் பதட்டமான ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. போராட்டங்கள், வியாதிகள், மனித உயிருக்கு அச்சுருத்தலாகவும், மரண ஓலமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர்கொண்டு வாழும் என்னுடைய வாழ்க்கையிலும் ஆண்டவர் தயை செய்வதற்குரிய காலமும், நேரமும் வருமா? ஐயோ, இந்த கொரோனாவினால் என் குடும்பத்தினர் யாவருக்கும் வேலை போய்விட்டதே, என் குடும்பத்திற்கு ஆண்டவருடைய தயவு கிடைக்குமா? என்றெல்லாம் அநேக கேள்விகளோடு இருதயத்திலே அழுது கொண்டிருக்கிற என் அன்பான தேவனுடைய பிள்ளைகளே, "உங்களுக்கு தயை செய்யும் காலம் வரும்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். சிலர் சொல்லுகிறீர்கள், 'எனக்கு நேரம் சரியில்லை'. ஆம் சரியில்லாத உங்கள் நேரத்தை சரிசெய்கிற ஆண்டவர், உங்கள் மத்தியில் எழும்பி வந்திருக்கிறார். அவர், "உங்கள் வாழ்வில் தயை செய்யும் காலமும், அதற்காக குறித்த நேரமும் வந்துவிட்டது" என்று உங்களுக்கு ஒரு மங்கள வாக்கு கொடுக்கிறார். வேதம் சொல்லுகிறது:


**"தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர் அதற்குத் தயைசெய்யுங்காலமும், அதற்காகக் குறித்தநேரமும் வந்தது" (சங்கீதம் 102:13)**

தேவரீர் என் வாழ்க்கையிலே எழுந்தருளும், நீர் எழுந்தருளினால்தான், என்னுடைய வாழ்க்கையில் தயை செய்யும் காலம் வரும் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்.

வேதத்தில், யோசேப்பை தன் சொந்த சகோதரர்களே குழியில் தள்ளி, அவனை இஸ்மவேலரிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றார்கள். அரண்மனையில் பொய் குற்றம் சாட்டி, அவனை சிறையில் அடைத்தார்கள். சிறைச்சாலையில் யோசேப்பு இருந்தபோது, சிறைச்சாலை தலைவனுடைய கண்களில் தயவு கிடைக்க ஆண்டவர் கிருபை செய்தார். அவன் சிறையில் இருந்தாலும் ராஜ வாழ்க்கை வாழ்ந்தான். வேதம் சொல்லுகிறது:

**"கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்...கர்த்தர் அவனோடே இருந்த படியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப் பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை"**
**(ஆதி. 39: 21, 23).**

துயரத்தின் உச்ச கட்டத்தில் இருந்த யோசேப்பின் வாழ்வில், தயை செய்கிற காலம் வந்தபோது, யாரும் அவனை மட்டம்தட்ட முடியவில்லை. ஆண்டவர் அவனை திமிரிட்டு எழும்பப் பண்ணினார். ஆண்டவர் அவனை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிகாரியாக உயர்த்தினார் (ஆதியாகமம்41:41,42). அதுபோல ஆண்டவருடைய தயை செய்யும் காலம் உங்கள் வாழ்வில் வரும்பொழுது உங்களையும் ஆசீர்வதித்து, திமிரிட்டு எழும்பப் பண்ணுவார். உங்கள் கட்டுகளையெல்லாம் அறுப்பார். அல்லேலூயா.




"தயை செய்யும் காலம்" என்ற இந்த மங்கள வார்த்தையை வாசிக்கும்போதே, அநேகர் புத்தி தெளிவார்கள், தங்கள் ஆவியிலே விடுதலை யடைவார்கள். பிசாசினால் குருடாக்கப்பட்ட அவர்கள் மனக்கண்கள் திறக்கப்படும். அவா;கள் வாழ்வில் காணப்படும் அறியாமை என்ற இருள் தானாக விலகும். விசுவாசத்தோடு வாசியுங்கள். ஆண்டவர் உங்கள் வாழ்வில் அற்புதங்களை நடப்பிப்பார்.

உங்கள் வாழ்க்கையில், தயை செய்கிற காலமும் குறித்த நேரமும் வரும்பொழுது, ஆண்டவர் என்னென்ன காரியங்களை செய்கிறார், என்னென்ன ஆசீர் வாதங்களை, செழிப்பை உங்களுக்குத் தருகிறார் என்பதைக் குறித்து நாம் சுருக்கமாக தியானிப்போம்.

### தேவ தயவின் காலம் வரும்போது

# "உங்கள் வாழ்வு செழிக்கும் நீங்கள் செல்வமாய் வாழ்வீர்கள்"

ஆண்டவர் உங்கள் வாழ்வில் தயை செய்யும் காலம் வரும்போது, நீங்கள் புசித்து, திருப்தியாகி, தேவனுடைய தயவினால் நீங்கள் செழிப்பாய், செல்வமாய் வாழ்வீர்கள். வேதம் சொல்லுகிறது:

**"அவர்கள் அரணான பட்டணங் களையும், செழுமையான பூமியையும் கட்டிக்கொண்டு, சகலவித உடமைகள் நிறைந்த வீடுகளையும், வெட்டப்பட்ட துரவுகளையும், ஏராளமான திராட்சத்தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும், கனிகொடுக்கும் விருட்சங் களையும் சுதந்தரித்துக் கொண்டு, புசித்துத் திருப்தியாகிக் கொழுத்து, உம்முடைய பெரிய தயையினால் செல்வமாய் வாழ்ந்தார்கள்"**
**(நெகேமியா 9:25).**

ஆம், மேற்கண்ட வேத வசனத்தின்படி, தயை செய்கிற காலம் உங்கள் வாழ்வில் வரும்பொழுது, தானாக கீழ்க்கண்ட ஆசீர் வாதங்களை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள். உங்கள் கட்டுகள் எல்லாம் உடைக்கப்படும். நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள்.

**(அ) அரணான பட்டணம்:**

ஆண்டவருடைய தயை உங்கள் வாழ்வில் வரும்போது, உங்களுக்கு ஆண்டவர் அரணான பட்டணமாக (Safety Life) இருப்பார். இந்த உலகில் நீங்களும், உங்கள் பிள்ளைகளும், குடும்பத்தாரும் பாதுகாப்பாய் இருப்பீர்கள்.

**(ஆ) செழுமையான பூமி:**

ஆண்டவருடைய தயை உங்கள் வாழ்வில் வரும்போது, உங்களுக்கென்று அவர் ஒரு செழுமையான பூமியை,வளமான

வாழ்க்கையை (Prosperous Life) தருவார். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு செழிப்பு, பொருளாதாரத்தில் ஒரு செழிப்பு உங்களுக்கு தானாக உண்டாகும்.

**(இ) சகலவித உடமைகள் நிறைந்த வீடு:**

ஆண்டவருடைய தயை உங்கள் வாழ்வில் வரும்போது, உங்கள் வீட்டை ஆண்டவர் சகலவித உடமைகள் நிறைந்த வீடாய் (Fully furnished House) மாற்றுவார். உங்கள் வீடு சகலவித வஸ்துக்களாலும், உடைமைகளாலும் நிரம்பியிருக்கும்.

**(உ) வெட்டப்பட்ட துறவு:**

சகலவித வசதிகளோடு உங்கள் வீடு இருந்தாலும், தண்ணீர் இல்லையென்றால், எந்த பிரயோஜனமும் இல்லை. ஆண்டவருடைய தயவு உங்களுக்கு வரும்போது ஆண்டவர் உங்கள் வீட்டோடு, உங்களுக்கு வெட்டப்பட்ட துறவை கொடுப்பார். அது வற்றாத நீரூற்றாய் உங்கள் வாழ்வுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும் (ஏசாயா 58:11).

**(ஊ) ஏராளமான திராட்சை தோட்டம்:**

ஆண்டவருடைய தயவு உங்கள் வாழ்வில் வரும்போது, உங்களுக்கு வீடு மட்டுமல்ல, அதோடு தோட்டம், துறவுகளை உங்களுக்குக் கொடுத்து, உங்களை வாழ்ந்திருக்கும்படிச் செய்வார்.



**(எ) ஒலிவத்தோப்புகள்:**

உங்களுக்கு ஆண்டவருடைய தயவு கிடைக்கும்போது, உங்களுக்கு ஒலிவத்தோப்புகளை தருவார். எதற்கு ஒலிவத்தோப்புகள்? எண்ணெயினால் உங்கள் உடல்நிலையை குளிமையாக வைத்துக் கொள்ள. அதோடுகூட நீங்கள் 'அபிஷேகம்' என்ற எண்ணெயினால், வாழ்நாள் முழுவதும் நிரம்பிவழிகிற ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவீர்கள் (சங்கீதம் 23:5).

**(ஏ) கனிகொடுக்கும் விருட்சங்கள்:**

தயை செய்கிற காலம் வரும்பொழுது உங்கள் வீட்டில் எப்பொழுதும் பழங்கள் இருக்கும்., அதோடு கனிகொடுக்கும் விருட்சங்கள் உங்கள் வீட்டைச் சுற்றிலும் நிறைந்திருக்கும்.

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கும் பொழுதே, மேற்கண்ட வேத வசனத்திலிருந்து ஒரு வெளிச்சம் உங்களுக்குள் இறங்கி, உங்கள் வாழ்க்கையிலுள்ள எல்லா தரித்திரங்களையும், இல்லாமைகைகளையும் துரத்தி, உங்கள் கடன்களை அடைத்து உங்களை ஆசீர்வாதம் என்ற நிலைக்கு கொண்டுபோகிறதை நான் ஆவியிலே பார்க்கிறேன். எல்லா தரித்திரத்தின் ஆவிகளும் ஓடிப்போகிறது. காரணம், இந்த வசனத்தை ஆண்டவர் உயிர்ப்பிக்க வைத்து, ஆண்டவர் உங்களுக்கு நேராக அனுப்புகிறார். அல்லேலூயா.

பெங்களூரிலிருந்து சகோதரி பத்மாவதி அவர்கள் தனது சாட்சியை எனக்கு எழுதியிருந்தார்கள். அவர்கள் 5 வருடமாக (வயது 39 முதல் 44 வரை) கனடா தேசத்திற்குச் செல்ல, PR வாங்க முயற்சித்தார்கள். வயது 44 ஆகிவிட்டபடியால், அவர்களுக்கு PR கிடைக்கவில்லை. அதோடு PR விண்ணப்பிப்பதற்கு தகுதியை அவர்கள் இழந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர்கள் "தேவனுடைய அன்பு" ஜெப கோபுரத்திற்கு இமெயில் அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்காக நான் ஜெபித்த போது, ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுத்தார். "உனக்கென நியமித்திருக்கிற இடத்திற்கு ஆண்டவர் உன்னை துரிதமாய் கொண்டுபோய் சேர்ப்பார்". யோபு 23:14-ன் படி "எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்" என்ற வேத வசனத்தை உரிமையாக்கி, Claim-பண்ணி ஜெபம் செய்யுங்கள். உங்களுக்கு கனடாவிற்கு போக PR கிடைக்கும் என்று பதில் கடிதம் எழுதியிருந்தேன். PR வாங்க தகுதியே இல்லாத அவர்களுக்கு உடனே PR கிடைத்து, அவர்கள் சந்தோஷமாக கனடா தேசம் செல்லும்படி ஆண்டவர் கிருபை செய்தார். உங்களுக்கும் அப்படியே அற்புதம் செய்வார். அல்லேலூயா.

தேவ தயவின் காலம் வரும்போது


**"உங்கள் இல்லற வாழ்க்கையிலிருக்கிற எல்லா தடைகளும் உடைக்கப்படும்"**

உங்கள் குடும்ப வாழ்க்கை ஆண்டவருக்கு மிக மிக முக்கியம். நீங்கள் யாவரும் குடும்பமாக ஆண்டவருடைய ஆலயத்திற்குச் செல்ல வேண்டும், குடும்பமாக அவருடைய வேதத்தை வாசித்து தியானிக்கவேண்டும், குடும்பமாக அவருக்கு ஊழியம் செய்யவேண்டும், குடும்பமாக பரலோகத்திற்குச் செல்லவேண்டும் என்பது ஆண்டவருடைய திட்டம். தேவ தயவின் காலம் உங்களுக்கு நேராக வரும்பொழுது, உங்கள் இல்லற வாழ்க்கையிலிருக்கிற கட்டுகள் உடைக்கப்பட்டு, குடும்பங்கள் கட்டப்படும். நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள். வேதம் சொல்லுகிறது:

**"மனைவியைக் கண்டடைகிறவன் நன்மை யானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான்" (நீதிமொழிகள் 18:22).**

தேவ தயவின் காலம் வரும்பொழுது, திருமண தடைகள் உடைக்கப்படும். உங்களில் அநேகர் என் பிள்ளைகளுக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லையே என அழுதுகொண்டு இருக்கின்றீர்களா? இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கும்போதே, ஆண்டவர் உங்கள் பிள்ளைகளுடைய திருமண தடைகளை உடைத்தெறிந்து, கட்டுகளை அறுத்து, அவர்களுக்கேற்ற வாழ்க்கைத் துணையை அருளி, அவர்கள் திருமண வாழ்க்கையை கட்டி எழுப்புகிறார். சாபங்கள், தடைகள் உங்கள் பிள்ளைகளைவிட்டு மறைகிறது. அதை நான் என் ஆவியிலே காண்கிறேன். அல்லேலூயா.

ஒருமுறை ஒரு தாயார், தன் மகனுடன், "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அந்த தாயாரின் மகன், "சகோதரர் இந்த மாதமாவது என் பெயரைச் சொல்லி கூப்பிடமாட்டாரா? (Name Calling)" என்று ஏக்கத்தோடு இருந்தான். ஏனென்றால் அவன் படித்து, முடித்து அநேக வருடங்களாக வேலையின்றி, திருமணமாகாமல் விரக்தியோடு இருந்தான். ஆனால் ஆண்டவர் வித்தியாசமாக அவர்களோடு பேசினார். ஆண்டவர்




என்னிடம், "ஒரு தாயார் இந்தக் கூட்டத்தில், தன் மகனோடு வந்திருக்கின்றீர்கள். உங்கள் மகன் படித்து முடித்ததும், வேலை கிடைத்திருந்தால் அவனுக்கு ஏற்ற காலத்தில் திருமணம் முடித்து வைத்திருப்பேனே என்று ஏக்கத்தோடு இருதயத்தில் சொல்லுகிறீர்கள். இன்றைக்கு உங்கள் மகன் வீட்டிற்குச் சென்று, அவன் கைபேசியை ஆண் பண்ணினவுடனே, அவனுக்கு வேலை கிடைக்கும். உடனே அவன் திருமண காரியமும் கைகூடிவரும்" என்றார்.

அவர்கள் தாயும், மகனுமாக வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் மகன் தன் கைபேசியை ஆண் பண்ணினவுடனே, அவனுக்கு ஒரு நல்ல செய்தி காத்திருந்தது. நல்லதொரு கம்பெனியில், நல்ல ஒரு வேலை கிடைத்து. மட்டுமல்ல ஒருசில மாதங்களுக்குள் அவர்கள் மகனுக்கு திருமணமும் நல்லபடியாக நடந்தேறியது. அவர்கள் தாயும், மகனும், மருமகளுமாக இணைந்து சாட்சி சொல்வதை, நீங்கள் இங்கே பார்க்கின்றீர்கள்.

சிலர் நினைக்கின்றீர்கள், எனக்கு திருமணமாகிவிட்டது. ஆனால் நான் இன்னும் வாழவில்லை. கவலைப்படாதீர்கள். அந்த தடைகளை ஆண்டவர் இன்றைக்கு உடைக்கிறார். "வாழ்ந்திருக்கச் செய்வாராக" என்ற வார்த்தையை ஆண்டவர் அனுப்பி, திருமணமாகியும், வாழாத உங்களை, உங்கள் வாழ்க்கைத் துணையோடு இன்றைக்கு சேர்ந்து வாழ வைப்பார். போவாஸையும், ரூத்தையும் மக்கள் வாழ்த்தியதுபோல, உங்களையும் "இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த ராகேலைப்போலவும், லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக! (ரூத் 4:11). அல்லேலூயா.

சில வருடங்களுக்கு முன், சாந்தோம் சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபையில், 3 நாட்கள் செய்தியளிக்க அழைக்கப்பட்டிருந்தேன். 3-வது நாள், ஒரு இளம் தம்பதியர் என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். உடனே நான் அந்த மகளைப் பார்த்து கேட்டேன், 'எதற்காக ஜெபிக்க வேண்டும்?' "ஐயா, எங்களுக்கு திருமணமாகி 5 வருடங்கள் ஆகிவிட்டது. இன்னும் குழந்தை இல்லை. எங்களுக்காக ஜெபியுங்கள்" என்றாள். கண்ணை மூடி இந்தப் பிள்ளைகளுக்காக ஜெபிக்க நான் ஆரம்பித்தபோது, திடீரென ஒரு காட்சியை கண்டேன். "5 வருடமாக இவர்கள் இரண்டு பேருக்கும் இடையில் கணவன் மனைவி என்ற உறவே இல்லை. இருவரும் ஒரே கட்டிலில், வெவ்வேறு திசையில் திரும்பி படுத்திருக்கின்றார்கள்" என்று ஆண்டவர் காண்பித்தார். இது ஒரு பிசாசின் திட்டம். அவர்கள் சந்ததி பெருகாதபடி, பிசாசு அவர்களை கட்டி வைத்துள்ளான் என்று ஆண்டவர் வெளிப்படுத்தினார்.



நான் மறுபடியும் அவளுடைய கணவரைப் பார்த்து கேட்டேன், "தம்பி உங்கள் இருவருக்குள்ளும் ஒரு புனிதமான உறவு என்பது இல்லையே" என்றேன். உடனே அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். அடுத்த நாள், நீங்கள் இருவரும் தேவனின் அன்பு ஜெப கோபுரத்தில் என்னைப் பார்த்து ஜெபிக்க வரவேண்டும் என்று அவர்களுக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்தேன். அவர்கள் இருவரும் ஜெப கோபுரத்திற்கு வந்தார்கள். அவர்கள் இருவருக்கும், வேலை இருந்தது, வசதி இருந்தது, லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கினார்கள். ஆனால் இல்லற வாழ்வு என்பது இல்லை. அதை பிசாசு கட்டி வைத்திருந்தான். ஆண்டவர் சொன்னார், "அவர்களின் கட்டை உடைத்து ஜெபி. அடுத்த நிமிடத்தில் அவர்கள் சந்ததி விரிவாக்கத்திற்கு வழிதிறக்கப்படும்" என்றார். ஒரு மணிநேரம் அவர்களுக்காக ஜெபித்து, தகுந்த தேவ ஆலோசனை கொடுத்து, அவர்களுடைய கட்டுகளை உடைத்தேன். அதே மாதமே அவர்கள் கற்பமாகி, ஒரு குழந்தையை பெற்றெடுத்தார்கள். அவர்கள் சந்ததி பெருகிற்று. இதோ அவர்கள் கணவனும், மனைவியும், குழந்தையுமாக வந்து சாட்சி சொல்வதை நீங்கள் பார்க்கின்றீர்கள். அல்லேலூயா.

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே, இன்றைக்கு மனுஷராலே தள்ளி வைக்கப்பட்ட புருஷர்கள், மனைவிமார்கள் அநேகர் இந்த மங்கள வார்த்தையை வாசித்துக் கொண்டு இருக்கின்றீர்கள். ஆண்டவரே, என்னை தள்ளி வைத்துவிட்டார்களே, நான் வாழவில்லையே, என் வாலிபம் அழிந்து கொண்டிருக்கின்றதே. என்னுடைய வாழ்வின் சந்தோஷங்களை நானே குழிதோண்டி புதைத்து விட்டேனே என்று கண்ணீரோடு சொல்லுகிறீர்கள். அந்த கட்டுகளையெல்லாம் ஆண்டவர் அறுத்தெறிகிறார். நீங்கள் சேர்ந்து வாழ கிருபை செய்கிறார். அல்லேலூயா.

### தேவ தயவின் காலம் வரும்போது

## "குடும்பத்தில் இருக்கிற அவமானங்கள் நீங்கி, சந்ததி பெருகும்"

தேவ தயவு ஒரு குடும்பத்தில் வரும்போது, குடும்பத்தில் இருக்கின்ற அவமானங்கள் நீங்கி, அவர்கள் குடும்ப வாழ்வில் சந்ததி பெருகும். வேதம் சொல்லுகிறது:

**"போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான்; அவள் அவனுக்கு மனைவியானாள்; அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது, அவள் கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம் பண்ணினார். அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபலமாகக்கடவது" (ரூத் 4:13,14).**

ரூத்திற்குக் குழந்தை பிறந்த உடனே, நகோமியை பார்த்து ஜனங்கள், "சுதந்திரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்கு தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம், உனக்குப் பிறந்திருக்கிற உன் பேரனுடைய பெயர் பிரபலமாகக்கடவது" என்று வாழ்த்தினார்கள். ரூத்திற்கு ஆண்டவர் ஒரு ஆண் குழந்தையை கொடுத்தபடியால், நகோமியினுடைய சந்ததி பெருகிற்று. இயல்பாக பார்த்தால், நகோமியின் கணவரும், 2 பிள்ளைகளும் மரித்துவிட்டார்கள். ஆனால் ஆண்டவர் தயை செய்யும் காலம் வந்தபோது, ரூத்திற்கு மறுவாழ்வு கொடுத்து, ஆண்டவர் சந்ததியை பெருகப்பண்ணினார்.

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற உங்களில் அநேகர், ஆண்டவரே எனக்கு குழந்தை இல்லையே, எனக்கு சந்ததி இல்லையே என்று கண்ணீர் வடிக்கின்றீர்கள். உங்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார், "உனக்கு சந்ததி அற்றுப்போகாதபடிக்கு, தடைகளை உடைத்து, ஆண்டவர் உங்கள் கற்பங்களை திறக்கிறார்". இந்த வேத வசனம் உங்களுக்குள் பாய்ந்து, உங்கள்

கட்டுகளை அறுத்து உடைத்து, உங்கள் சாபங்கள் யாவற்றையும் வெளியேற்றுவதை நான் என் ஆவியில் காண்கிறேன். ஆம் பெலனுள்ளவனுக்காகிலும், பெலனில்லாதவனுக்காகிலும் உதவி செய்வது ஆண்டவருக்கு லேசான காரியம்"(2 நாளாகமம் 14:11). அல்லேலூயா.

தேவ தயவின் காலம் வரும்போது

**"குடும்பத்தில் இருக்கிற மரண கட்டுகள் அறுக்கப்படும்"**

தேவ தயவு ஒரு குடும்பத்தில் வந்துவிட்டால், அந்த குடும்பத்தில் வியாதிகளுக்கு, மரணக்கட்டுகளுக்கு இடமில்லை. வேதம் சொல்லுகிறது:

**"அவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப் பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்டுமென்று, அவரை வேண்டிக் கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு: நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்" (லூக்கா 7:3,4)**

தேவ தயவு வரும்போது, இத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள் என்று சொல்லுகின்றீர்களே, நான் அந்த தயவை பெற்றுக் கொள்வதற்கு பாத்திரவானாய் இருக்கிறேனா? அதைப் பெற்றுக்கொள்ள தகுதி எனக்கு இருக்கிறதா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். ஆம், ஆண்டவர் உங்களுக்காக இரத்தம் சிந்தியபடியினால், அவருடைய இரத்தத்தினால் நீங்கள் தயை பெற்றுக்கொள்வதற்குரிய பாத்திரவானாய் மாறிவிட்டீர்கள் (எபேசியா; 2:13).

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கும் போதே, ஆண்டவர் உங்களை தமது ஆணிபாய்ந்த கரங்களினால் தொட்டு, உங்கள் சரீரத்திலிருக்கிற எல்லா வியாதி என்ற கட்டுகள், மரணம் என்ற கட்டுகள், மந்திரக் கட்டுகள் எல்லாவற்றையும் உடைத்து, உங்களுக்கு தெய்வீக சுகத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுத்து கர்த்தர் உங்களை வாழ்ந்திருக்கச் செய்வார். ஆண்டவருடைய கரம் கூட இருந்து, தீங்கு உங்களை துக்கப்படுத்தாதபடி காத்துக்கொள்ளும் (1 நாளாகமம் 4:10). அல்லேலூயா.

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.





துயரில் வாடும் மக்களுக்கு

# மும்பை ஜெப கோபுரம்

ஒரு கலங்கரை விளக்கம்!

Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர – சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

ஒவ்வொரு மாதமும் தேவனின் அன்பு ஊழியங்களைக் குறித்து எழுதிக்கொண்டிருக்கிறேன். இம்மாதமும் மும்பை அடைக்கலப்பட்டணத்தைக் (ஜெப கோபுரம்) குறித்து எழுதும்படி கிருபை கொடுத்த தேவனுக்கு நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 116:12,13).

**தரிசனம்:**

கடந்த பல வருடங்களாக, மும்பை நகரிலிருந்து அநேக மக்கள் சகோதரர் அவர்களை நேரில் பார்த்து ஜெபிக்க, சென்னைக்கு வருவார்கள். அவர்கள் சகோதரரிடம், "ஐயா நாங்கள் 1½ நாள் பிரயாணம் செய்து, உங்களை பார்த்து ஜெபிக்க வந்திருக்கிறோம். இன்னும் எவ்வளவோ மக்கள் மும்பை நகரில் உங்களை நேரில் பார்த்து ஜெபிக்க ஆவலாய் இருக்கிறார்கள். ஆகவே அவர்களெல்லாரும் உங்களை நேரில் பார்த்து ஜெபிப்பதற்கும், மும்பை மற்றும் வட இந்திய மக்கள் யாவரும் ஆண்டவரை அறிந்து

மும்பை அடைக்கலப்பட்டணம்

கொள்ளவும் வசதியாக மும்பை பட்டணத்தில் ஒரு ஜெப கோபுரத்தை ஆரம்பிக்கக் கூடாதா?" என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். சகோதரரும் பல ஆண்டுகளாக அதை ஜெபத்தில் வைத்திருந்தார்கள்.



**மும்பை அடைக்கலப்பட்டணம் திறப்பு:**

சகோதரரின் தொடர் ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர், மும்பையில் ஜெப கோபுரம் ஆரம்பிக்கும்படி கட்டளையிட்டார். மும்பை Dr.R.S.A. வில்லியம்ஸ் அவர்களின் பாரமான ஜெபத்தினாலும், அயராத முயற்சியினாலும் இந்த ஜெப கோபுரம் உங்களுக்காக ஆயத்தமானது. இக்காரியத்தில் ஆண்டவரின் தெளிவான வழிநடத்துதல் இருந்தபடியால், உங்கள் யாவருடைய ஒத்தாசையாலும், உங்களைப் போன்ற அன்பானவர்களின் ஜெபத்தினாலும் மும்பை ஜெப கோபுரம் ஜூலை 28, 2019 அன்று சகோதரர் அவர்களால் ஜெபத்துடன் திறந்து வைக்கப்பட்டது.

**அடைக்கலப்பட்டணத்தைக் குறித்து ஆண்டவரின் வெளிப்பாடு:**

மும்பை ஜெப கோபுரம் திறப்பு விழாவில் கலந்துகொண்ட தேவ பிள்ளைகளுக்கு என்ன தேவ செய்தியை பகிர்ந்துகொள்வது என்று சகோதரர் ஆண்டவரின் சமூகத்தில் காத்திருந்தபோது, ஆண்டவர் அவருக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார். "மும்பை தேவனின் அன்பு ஜெப கோபுரத்திற்குள் இருக்கின்ற எல்லா சுவர்களிலும் இயேசு கிறிஸ்துவினுடைய கண்களும், செவிகளும் பதிந்திருப்பதை ஆவிக்குரிய கண்களால் பார்த்தார். இது குறித்து சகோதரர் ஆண்டவரிடம் கேட்டபோது, இந்த ஜெப அறைக்குள் யார் வந்தாலும், அவர்களை என் கண்கள் காணும். அவர்களுடைய இருதயத்தின் வேதனைகளை, குமுறுலை நான் பார்ப்பேன். அவர்களுடைய புலம்பலை என் செவிகள் கேட்கும். நான் இந்த அடைக்கலப் பட்டணத்தில் இருக்கிறேன்" என்று வெளிப்படுத்தினார். அதோடு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சாலொமோன் ராஜா ஒரு தேவ ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தபோது, அவனுக்குக் கொடுத்த அதே வாக்குத்தத்த வசனத்தை, வெளிப்பாடாக சகோதரருக்கும் கொடுத்தார். அந்த வெளிப்பாட்டு வசனம்:







**"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்" (2 நாளாகமம் 7:15).**



மும்பை அடைக்கலப்பட்டணத்திற்கு நீங்கள் வரும்பொழுது உங்கள் யாவருடைய கண்ணீரையும் ஆண்டவர் துடைப்பார். உங்கள் துக்கங்களை எல்லாம் ஆண்டவர் சந்தோஷமாய் மாற்றுவார். உங்கள் பிரச்சனைகள் யாவும் தீர்த்து வைக்கப்படும். வேதம் சொல்லுகிறது:

"**கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" (சங்கீதம் 55:22).**

உள்ளே வரும்பொழுது, காது கேட்கவில்லை, கண்களில் பார்வையில்லை, குடும்பத்தில் சமாதானமில்லை, பிசாசின் போராட்டம், கடன் பிரச்சனை, பொருளாதார பிரச்சனை எங்களை நெருக்குகிறது என்கிற குறைவுகளோடு நீங்கள் வருவீர்கள். ஆனால் ஜெபித்துவிட்டுச் திரும்பிச் செல்லும்போது அற்புதங்களை சுமந்து செல்லுவீர்கள். ஆகவே ஜாதி, மத, பேதமின்றி, உங்கள் யாவரையும் மும்பை அடைக்கலப்பட்டணத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கிறேன்.

மும்பை ஜெபகோபுரம், சகோதரர் அலெக்ஸ் சாமுவேல் மற்றும் அநேக தன்னார்வ ஜெப வீரர்கள் யாவரின் ஒத்தாசையோடு மிகவும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. ஆண்டவர் தாமே அவர்கள் தியாக சிந்தையை நினைத்தருளி, அவர்கள் குடும்பத்தாரையும், செய்கிற வேலையையும், தொழிலையும் பன்மடங்காய் ஆசீர்வதித்து உயர்த்துவராக! (எபிரெயர் 6:10). அவர்கள் எல்லா விதத்திலும் வாழ்ந்து, சுகித்திருப்பார்களாக! (3 யோவான் 2).

**மும்பை அடைக்கலப்பட்டணத்தில் அற்புதங்கள்:**

மும்பை அடைக்கலப்பட்டணம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் ஆண்டவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை செய்துவருகிறார். உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்பொருட்டு, ஒருசில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்.

## கட்டி மறைந்தது!



என்னுடைய நெற்றியில் சிறிய கட்டிகள் ஏராளம் இருந்தது. இதற்காக ஜெபிக்கும்படி மும்பை அடைக்கலப்பட்டணத்திற்கு ஒரு சனிக்கிழமை சென்றிருந்தேன். அப்பொழுது அங்கே ஒரு சகோதரி அவர்கள் ஜெப எண்ணெயை பாட்டில்களில் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து, பாட்டில்களில் ஜெப எண்ணெயை நிரப்பும்படி உட்கார்ந்தேன். அந்த வேளையில் சில சொட்டு எண்ணெய் கீழே சிந்திவிட்டது. அதை எடுத்து அப்படியே என் நெற்றியில் பூசினேன். என்னுடைய நெற்றிப் பகுதியில் சிறிய கட்டிகள் ஏராளம் இருந்தன.ஜெப வீரரிடமும் ஜெபித்துக்கொண்டேன். அடுத்த நாள் நெற்றியைப் பார்த்தேன், கட்டிகள் எல்லாம் மறைந்திருந்தன. ஜெபித்த ஜெப வீரருக்கும், ஜெப எண்ணெயின் மூலம் அற்புதம் செய்த ஆண்டவருக்கும் நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

– **ஏஞ்சல் ஜெய்ரூன்**, மும்பை

## மூளை வியாதி சுகமானது



என்னுடைய நெற்றியில் சிறிய கட்டிகள் பல வருடங்களுக்கு முன் நான் தாங்கமுடியாத மூளை வியாதியினால் கஷ்டப்பட்டேன். என்ன செய்வதென்று தொரிியாமல், அனுதினமும் மது அருந்திவந்தேன். மும்பையிலுள்ள ஒரு ஆன்ட்டி (Aunty) சகோதரர் T.ஸ்டீபன் அவர்களைக் குறித்து என்னிடம் சொன்னார்கள். அந்த சமயத்தில் சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் மும்பையில் இருந்ததால், அவரை நேரில் பார்த்து ஜெபித்தேன். என்ன ஆச்சரியம். ஆண்டவர் எனக்கு உடனே பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தற்போது எனக்கு திருமணம் முடிந்து, ஒரு பெண் குழந்தை இருக்கிறது.

மறுபடியும் 2 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் எனக்கு மூளையில் தாங்கமுடியாத பிரச்சனை ஏற்பட்டது. நான் என்னுடைய வீட்டில் தங்காமல், குளிக்காமல், நாள் முழுவதும் மது அருந்திக்கொண்டே இருந்தேன். மறுபடியும் சகோதரர் T.ஸ்டீபன் அவர்களிடம் ஜெபிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். மும்பை ஜெப கோபுரத்தைத் தொடர்புகொண்டபோது, அவர்கள் சகோதரரோடு தொலைபேசியில் ஜெபிக்க ஏற்பாடு செய்தார்கள். தொலைபேசியில் சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் ஜெபித்த உடனே, ஆண்டவர் என்னை தமது ஆணிபாய்ந்த கரங்களினால் தொட்டு மறுபடியும் என்னை சுகப்படுத்தினார்.

ஜெபித்த சகோதரர் T.ஸ்டீபன் அவர்களுக்கும், அற்புதம் செய்த ஆண்டவருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறேன். ஆண்டவருடைய நாமம் மகிமைப் படுவதாக!

– **ராஜு**, மும்பை

**ஜெப வீரர்கள்:**

மும்பை அடைக்கலப்பட்டணத்தில் உங்களுக்காக ஜெபிக்க எங்கள் ஜெப வீரா;கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கின்றார்கள். இந்த அடைக்கலப்பட்டணம், **காலை 9.30 மணி முதல் மாலை 6.45 மணிவரை திறந்திருக்கும்.** ஜெப கோபுரத்திற்கு நேரடியாக வர இயலாதவர்கள், கைபேசி எண்ணோடு தொடர்புகொண்டு, ஜெபித்துக் கொள்ளலாம். **கைபேசி எண்: 9930737999** ஆகும். ஜெப கோபுரத்தில், தியான அறை, ஜெப அறை, சிறப்பு ஆலோசனை மையம், உட்பட அனைத்து வசதிகளும் உள்ளன. நீங்கள் ஒருவேளை தனியாக அமர்ந்து ஜெபிக்க விரும்பினால், தியான அறைக்குச் சென்று ஜெபித்துக்கொள்ளலாம். புத்தக சாலையில் எங்கள் ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் வெளியீடுகளை பெற்றுக்கொள்ளலாம்.

**தனி ஜெபம் (Personal Appointment):**



மும்பை தேவனின் அன்பு ஜெப கோபுரத்திற்கு வருகிறவர்களில் அநேகர் சகோதரரை நேரடியாக பார்த்து ஜெபிக்க விரும்புகின்றனர். இப்படிப் பட்டவர்களின் பிரச்சனைகள் யாவும் தீர, சகோதரர் அவர்கள், மாதத்தில் இரண்டு நாட்கள், மும்பை ஜெப கோபுரத்தில் வைத்து அவர்கள் ஒவ்வொருவரையும் நேரடியாக பார்த்து, ஜெபிப்பதுடன், ஆண்டவர் கொடுக்கும் சிறப்பு ஆலோசனைகளையும், மங்கள வார்த்தைகளையும் கொடுத்து அனுப்புவார். சகோதரரின் நேரடி ஜெபத்தின் மூலம் அநேக அற்புதங்கள் நடந்திருக்கின்றன. அநேகர் சுகம் பெற்றுள்ளனர் (யாக்கோபு 5:15). பிரச்சனைகளோடு வருகிறவர்கள், பிரச்சனைகள் தீர்ந்து, சமாதானமாய் வாழ்ந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆம், மும்பை ஜெப கோபுரத்திற்கு வாருங்கள். அற்புதங்களை ருசித்துச் செல்லுங்கள்!

# மும்பை ஆசீர்வாத திருவிழா

ஜனவரி 19, 2020









மும்பை ஜெப கோபுரம் ஆரம்பித்த பிறகு, ஜனவரி, 19, 2020 அன்று தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாக மும்பை ஆசீர்வாதத் திருவிழா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, ஆண்டவருடைய நாமத்தை மகிமைப் படுத்தினார்கள். அன்பு சகோதரர் அவர்களை ஆண்டவர் இக்கூட்டத்தில் தமது ஆவியினாலும், வரங்களினாலும் நிறைத்து, வல்லமையாக பயன்படுத்தினார். அநேகர் தங்களை ஆண்டவருக் கென்று ஒப்புக்கொடுத்தனர்.

மும்பை ஜெப கோபுரத்தின் மூலமும், அதன் பின் நடைபெற்ற மும்பை ஆசீர்வாதத் திருவிழாவின் மூலமும் ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்துள்ளபடியால், அவருக்கே எல்லா துதி, கனம், மகிமையை செலுத்துகிறேன். இவைகள் எங்களால் உண்டானதல்ல, தேவனுடைய ஈவு, அவருடைய சுத்த கிருபை!

ஆண்டவர் தாமே உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! உங்கள் ஜெப உதவிக்கும், கூடுதல் விபரங்களுக்கும்:

**தேவனின் அன்பு ஜெபகோபுரம்**
எண்.L-411, டிரீம்ஸ்-தி-மால்,
எல்.பி.எஸ். மார்க், சாகர் விகார்
அருகில், பாண்டுப் மேற்கு - 400 078

Contact:
**9930737999**
**+91 44 2454 7999**
**99419 50999**






Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள்,
சென்னை


# அவர் உங்களை விசாரிக்கிறவர்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர – சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. இந்த கடுமையான நாட்களிலும் கர்த்தர் அக்டோபர் மாதம் வரை நம்மை நடத்தி வந்திருக்கிறார். நவம்பர் மாதத்தை காண கிருபை செய்திருக்கிறார். நன்றி நிறைந்த இருதயத்தோடு நாம் அவரை துதிப்போம் (சங்கீதம் 103:1,2). வேதத்திலே ஒரு அருமையான வேத வசனத்தை பார்க்கிறோம்.

**"அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்"(1 பேதுரு 5:7).**


இப்பொழுதும் நாம் பல கஷ்டங்களை அனுபவித்து, தடுமாறி நவம்பர் மாதத்திற்குள் பிவேசித்திருக்கிறோம். ஆனாலு என்னை விசாரித்து என் கஷ்டத்தை போக்கவும், ஆறுதல் சொல்லவும் யாரும் இல்லையே என்று கலங்கி நிற்கிறீர்களா? இதோ உங்களை விசாரிக்கிறவர் ஒருவர் உண்டு. அவர் தாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் உங்களை விசாரிக்கிறவர். உங்கள்மேல் அக்கறை கொள்கிறவர். அவர் உங்களை அன்போடு விசாரிக்கிறபடியால், நீங்கள் ஒருபோதும் கவலைப்பட தேவையில்லை.

ஒரு வயதான மூதாட்டிக்கு 5 பிள்ளைகள், நல்ல நிலைமையில் இருந்தும், அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தார்கள். பிள்ளைகள் அந்த மூதாட்டியை சென்று பார்ப்பதும் இல்லை, விசாரிப்பதும் இல்லை. அம்மூதாட்டி படுக்கைக்குச் செல்லும்முன், "எனக்கு 5 பிள்ளைகள் இருந்தும், நான் விசாரிப்பாரின்றி, அநாதையாய் இருக்கிறேனே, என்னை யார் தேற்றுவார் இயேசுவே என்று அழுதுகொண்டே ஜெபித்துவிட்டு, தூங்கும் போது, மூதாட்டியின் சொப்பனத்தில், அவர்கள் பிள்ளைகள் நேரடியாக வந்து, ஒவ்வொரு நாளும் தேற்றுவது போலவே இருக்குமாம். தேவனுடைய அன்பு எவ்வளவு பெரியது பாருங்கள்!

பல வேளைகளில் நீங்கள் கஷ்டம், நஷ்டம், வியாதி என்று வரும்போது யாராவது வந்து பார்த்து விசாரித்துச் ஜெபம் பண்ணினால், ஆறுதல் வார்த்தைகள் கூறினால் எப்படி இருக்கும் என்று நினைத்ததுண்டா? ஆம், உங்கள் நினைவுகளை மனிதர்கள் அறிந்தார்களோ இல்லையோ என் தேவன் அறிந்து உங்களை விசாரிக்கிறவராய் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய யாக்கோபு இப்படி எழுதுகிறார்.

**"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாத படிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக்கோபு 1:27).**

இன்றைக்கு அவர் உங்கள் அருகிலே கடந்துவந்து, உங்கள்மேல் அக்கறைகொண்டு, உங்களை விசாரிக்கிறார். அவர் எப்படியெல்லாம் உங்களை விசாரிக்கிறார் என்பதை நாம் தியானிப்போமா?



# தனி மனிதனை விசாரிக்கிறார்

**"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்" (ஆதியாகமம் 3:9).**

ஆண்டவர் முதன் முதலில் தனி ஒரு மனிதனை விசாரித்தது எப்பொழுது தெரியுமா? ஏதேன் தோட்டத்திலே தான். ஆதாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், பாவம் செய்து, ஒளிந்து கொண்ட போது, அவனை கர்த்தர் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார்? (ஆதியாகமம் 3:9). ஏனென்றால் அவருக்கு மறைவானது இந்த உலகில் ஒன்றுமில்லை. நீ எந்த நிலைமையில் இருக்கிறாய் என்பது அவருக்குத் தெரியும். கர்த்தரோ உங்கள்மேல் அக்கறை கொண்டவர். உன்னுடைய கஷ்டம், நஷ்டம், பாவ வாழ்க்கை அவருக்குத் தெரியும். ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு லாபம் என்ன? (மத்தேயு 16:26). இன்று நீங்களே உங்களை ஆராய்ந்து பாருங்கள். ஆண்டவர் உங்களைப் பார்த்து எங்கே இருக்கின்றீர்கள்? எப்படி இருக்கின்றீர்கள்? ஆவிக்குரிய வாழ்வில் பின்மாற்றத்தில் போய்விட்டீர்களா? என்றெல்லாம் விசாரிக்கிறார்.

ஆண்டவரே என்னை விசாரிப்பார் யாரும் இல்லை, நான் தனிமையில் குடும்பத்தால் ஒதுக்கப்பட்டு, துயரத்தில் மூழ்கி, எழும்ப இயலாமல், இருக்கிறேன் என்று பலர் சொல்லுகிறீர்கள். நீங்கள் இந்த மங்கள வார்த்தையை வாசித்துக் கொண்டிருக்கும் போதே, ஆண்டவர் உங்களை விசாரிப்பார்! எதிர்பாராத இடங்களிலிருந்து உங்களுக்கு ஒத்தாசை அனுப்பி, உங்களை ஆதாரிப்பார்! (சங்கீதம் 20:2). உங்கள் கண்ணீரை துடைப்பார்! உங்கள் தனிமையை மாற்றி, உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார்! (பிலிப்பியர் 4:19). கவலைப்படாதிருங்கள்.

# குடும்பத்தை விசாரிக்கிறார்






# தேசத்தை விசாரிக்கிறார்

**"நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள் என்றான். அவள்: சுகந்தான் என்று சொல்லி..." (2 இராஜாக்கள் 4:26).**

சூனேமியாள் என்ற பெண்மணி கர்த்தருடைய ஊழியக்காரன் எலிசாவை கனப்படுத்தி, அன்புடன் உபசரித்து, பணிவிடை செய்தாள். ஒருநாள் அவளை விசாரிப்பதற்காக தன்னுடைய வேலைக்காரனை எலிசா அனுப்பினார். அந்த விசாரிப்பில் மூன்று பகுதிகள் இருந்தன. முதலாவது, நீ சுகமாய் இருக்கிறாயா? இரண்டாவது, உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? மூன்றாவது, உன் பிள்ளை சுகமாயிருக்கிறதா? கர்த்தரும் இதுபோல உங்களை மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தையும் அன்போடு விசாரிக்கிறார். இன்றைக்கு அநேக குடும்பங்களில் பிரச்சனைகள், பிரிவினைகள் தலைதூக்கி நிற்கின்றது. அவர்களை ஆறுதல்படுத்த, விசாரிக்க யாரும் இல்லை. யோசுவாவைப்போல நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம் (யோசுவா 24:15) என்ற லட்சியத்தோடு நீங்கள் குடும்பத்தை நடத்த பழகிக்கொள்ளுங்கள். உங்களுக்குள் ஒருபோதும் பிரச்சனைகள், பிரிவினைகள் வராது ஆண்டவர் காப்பார். கர்த்தரின் விசாரிப்பும், தயவும் உங்கள்மேல் எப்பொழுதும் இருக்கும்.

நோவா கர்த்தருக்கு முன்பாக நீதிமானாய் இருந்தபடியால், கர்த்தர் அவனையும், அவன் குடும்பத்தையும் பேழைக்குள் பாதுகாத்தார் அல்லவா! அதுபோல உங்களையும், உங்கள் குடும்பத்தையும் விசாரித்துக் காப்பார்! (ஆதியாகமம் 7:7).

ஐயோ இந்த பொது முடக்க காலத்தில் (Lockdown) என் பிள்ளைகள் எல்லாருக்கும் வேலை போய்விட்டதே, அன்றாடம் குடும்ப செலவுக்கு நான் என்ன செய்வேன்? என் குடும்பத்தை விசாரிக்க ஒருவரும் இல்லையே? என்று உங்களில் பலர் சொல்லுகிறீர்கள். இன்றைக்கு இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கும்போதே ஆண்டவர் உங்கள் குடும்பத்தை விசாரிப்பார்! உங்கள் பிள்ளைகளுக்கு புதிய வேலைகளை, நல்ல சம்பளத்தில் கொடுத்து, உங்களை மகிழ்விப்பார்! மனம் கலங்காதிருங்கள்!

**"அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப் பட்டிருக்கும்" (உபாகமம் 11:12).**

ஜனங்களை மட்டுமல்ல, தேசத்தையும் விசாரிக்கிறார். எதற்காக என்றால், தேசம் நன்மையை கண்டடைய, தேசம் செழிப்பை கண்டடைய. அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அவருடைய நாமத்தை தரித்தவர்களாய் நம்மைத் தாழ்த்தி, ஜெபம் செய்து, பொல்லாத வழிகளை விட்டு, மனம் திரும்பும்போது, தேவன் நம்முடைய தேசத்துக்கு க்ஷேமத்தை கொடுப்பார் (2 நாளாகமம் 7:14). செழிப்பும், ஆசீர்வாதமும் நம்முடைய தேசத்தில் உண்டாகும். தேசமே மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்! (யோவேல் 2:21).

ஐயோ கொரோனா நோயினால் எங்கள் தேச மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களே, உலகம் முழுவதும் இந்த நோயினால் லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மரித்துவிட்டார்களே. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் என்ன செய்வோம்? ஆண்டவரே! நீர்தான் எங்கள் குடும்பங்களையும், எங்கள் தேச மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்று பலர் சொல்லுகிறீர்கள். ஆண்டவர் நம்முடைய ஜெபங்களை கேட்டு, நிச்சயம் அற்புதம் செய்வார்! (சங்கீதம் 65:2). நம்பிக்கையோடு ஜெபிப்போம். உங்கள் துக்கம் நிச்சயம் சந்தோஷமாய் மாறும்! கர்த்தரையே இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்.

நாம் ஜெபிப்போமா. சந்தோஷத்தோடு இந்தப் பாடலைப் பாடி நம் தேவனை மகிமைப்படுத்துவோமா!

**தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்...**

**ஜெபம்:** அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தைகளை வாசிக்கிற தேவ பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன். நீர் அவர்கள் பாடுகளில், வேதனைகளில் அவர்களுக்குத் துணையாக இருந்து, அவர்களை விசாரிக்கிறபடியால் உமக்கு நன்றிசெலுத்துகிறேன்! அவர்களுடைய கண்ணீரை யெல்லாம் துடைத்து, கஷ்டங்களை யெல்லாம் நீக்கியருளும். இந்த கொரோனா பொது முடக்க நேரத்தில், அவர்களையும், அவர்கள் குடும்பங்களையும் எந்தவொரு தீங்கும் அணுகாதவண்ணம், உம்முடைய செட்டையின் நிழலில் வைத்துப் பாதுகாத்துக்கொள்ளும். ஒவ்வொரு குடும்பத்திலும் நீர் அசைவாடுவீராக. அவர்களுடைய வீட்டிலே நீர் தங்கியிருப்பீராக. அவர்கள் கஷ்டங்களை விசாரித்து, அவர்கள் நன்மையானதை காணும்படி செய்வீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

# வேத வினா போட்டி 5

## நவம்பர் மாத கேள்விகள்:

1. உடன்படிக்கை பெட்டியில் எவைகள் இருந்தன?
2. பழைய ஏற்பாட்டு காலத்தில் எத்தனை அடைக்கலப்பட்டணங்கள் இருந்தன?
3. பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் யார்? யார்?
4. கர்த்தருடைய சொற்கள் எதற்கு ஒப்பாய் இருக்கிறது?
5. இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே எதையெல்லாம் கண்டார்?
6. பரிசுத்த யோவான் எங்கிருந்தபோது, வெளிப்படுத்தின விசேஷம் வெளிப்படுத்தப்பட்டது?
7. கர்த்தரை நம்புகிறவர்கள் எதைப்போல் இருப்பார்கள்?
8. அசுத்த ஆவி திரும்பி வரும்போது என்ன நடக்கும்?
9. எந்தப் பட்டணத்தார் குற்றஞ்சுமத்துவார்கள்?
10. ஆண்டவர் பரிசேயரைப் பார்த்து எவைகளைச் செய்ய வேண்டும்? எவைகளை விடாதிருக்க வேண்டும் என்றார்?

## குலுக்கல் முறையில் அக்டோபர் மாதம் பரிசை வென்றவர்கள்

WINNERS

Bro.சாமுவேல் ஆல்பர்ட், மேற்கு வங்காளம்
Sis.ரூபி மார்த்தாள், தூத்துக்குடி

## அக்டோபர் மாத விடைகள்:

1. மனுஷன் (மாற்கு 10:9)
2. ஒட்டகம் (மாற்கு 10:25)
3. ஓசன்னா (மாற்கு 11:10)
4. தேவ தூதரைப்போல் (மாற்கு 12:25)
5. இரண்டு காசு (மாற்கு 12:42)
6. வசந்தகாலம் (மாற்கு 13:28)
7. வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை (மாற்கு 13:31)
8. நளதம் என்னும் தைலம் (மாற்கு 14:3)
9. இரண்டுதரம் (மாற்கு 14:30)
10. மகதலேனா மரியாளுக்கு (மாற்கு16:9)

## விதிமுறைகள்


1. சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும். அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில், பரிசளிக்கப்படும்.
2. விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.
3. விடைகள் ஒவ்வொரு மாதமும் 20-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேர வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

**Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள்**
14, ராமலிங்க நகர் OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை - 600 041.
**Mobile: + 91 44 24547999 / 9941950999**
**Email: prayer@godsloveministries.co.in**
**www.godsloveministries.co.in**

BIBLE QUIZ

# ஆண்டவரின் அற்புதங்கள்

சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, "தேவனின் அன்பு ஊழித்தை ஸ்தாபித்து, உலகெலங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது; அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை, ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:



## குழந்தை பாக்கியம் கிடைத்தது!

எனக்கு திருமணம் முடிந்து 8 வருடங்களாக குழந்தை இல்லாமல், மிகுந்த அவமானத்தோடு இருந்தேன். இந்த நிலையில் மார்ச் 2019-ம் ஆண்டு "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டேன். கூட்டத்தின் முடிவில் சகோதரர் T.ஸ்டீபன் அவர்களின் தனி ஜெபத்தில், "அடைக்கப்பட்ட கர்ப்பம் திறக்கப்படும்" என்று மங்கள வார்த்தை கூறினார். என்ன ஆச்சரியம்! சகோதரரின் மங்கள வார்த்தை அப்படியே என் வாழ்வில் நிறைவேறியது. ஒருசில நாட்களில், நான் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து பார்த்தபோது நான் கருவுற்றிருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்தார்கள். அதன் பிறகு சுகபிரசவத்தில் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன்.

– திருமதி. **சாந்தா**, சென்னை

## மகனுக்கு பரிபூரண சுகம் கிடைத்தது!



உங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாங்கள் குடும்பமாக பார்த்துவருகிறோம். 25 வருடமாக என் மகன், தலையின் உள்பகுதியில் இரத்தக் கசிவு ஏற்பட்டு, தலைவலியினால் துடித்துக்கொண்டிருந்தான். பல மருத்துவமனையில் காண்பித்தும், அவனுக்கு தலைவலி குறையவே இல்லை. சமீபத்தில் சகோதரர் அவர்கள் நம்பிக்கை டி.வியில் வழங்கிய தேவ செய்தியில் பெரும்பாடு உள்ள ஸ்திரீயை குறித்து செய்தியளித்தார்கள். ஜெப வேளையில், யாரெல்லாம் சரீரத்தில் கட்டிகள், காயங்கள் மூலம் இரத்த கசிவு ஏற்பட்டு கஷ்டப்படுகிறீர்களோ, அவர்கள் எல்லோரும் பாதிக்கப்பட்ட இடத்தில் கையை வைத்து, என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள் என்று சகோதரர் சொன்னபோது என்னுடைய மகனும் தனது கைகளை தலையில் வைத்து, சகோதரருடன் இணைந்து ஜெபித்தான். என்ன ஆச்சரியம்! அந்த நொடியே என் மகன் தலைவலியிலிருந்து விடுதலை பெற்றான். மருத்துவப் பரிசோதனை செய்தபோது, அவன் தலைவலியிலிருந்து பரிபூரண சுகம் பெற்றுவிட்டதாக மருத்துவ அறிக்கை வந்தது.

சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, என் மகனுக்கு பரிபூரண சுகம் கொடுத்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

– திருமதி. **பத்மாவதி**, கோவை

## சர்க்கரை வியாதி சுகமானது



நான் சாக்கரை வியாதியினால் 8 வருடமாக வேதனையோடு இருந்தேன். மாத்திரை சாப்பிட்டாலும், நார்மல்-க்கு குறையாமல் எனக்கு சர்க்கரை இருந்தது. சகோதரர் அவர்கள் தொலைக்காட்சியில், அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டத்திற்கு வருகிறவர்கள், அந்தக் கூட்டம் முடிந்ததும், அவர்களுக்கு வழங்கப்படும் ஆசீர்வதிக்கப்பட்ட உணவை, ஆண்டவரும், அவருடைய தூதர்களும் வந்து ஆசீர்வதித்துக் கொடுக்கிறார்கள். இந்த உணவை அருந்தி, அநேகர் சுகமடைகிறார்கள். ஆகவே அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டத்திற்கு நீங்களும் வந்து, சாப்பிட்டால், உங்கள் நோய்களெல்லாம் குணமாகும் என்று சொன்னார். சகோதரருடைய வார்த்தைகளை நாங்கள் விசுவாசித்து, நாங்கள் அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டத்திற்கு 6 மாதமாக வருகிறோம். கூட்டம் முடிந்ததும் ஆசீர்வதிக்கப்பட்ட உணவை அருந்தினோம். என்ன ஆச்சரியம்! நான் மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதனை செய்தபோது, என்னுடைய சர்க்கரை அளவு நார்மல் என்று மருத்துவ அறிக்கை வந்துள்ளது. மேலும் நாங்கள் ரூ. 1 லட்சம் கடனை அடைக்கவும், 3 பவுன் செயின் வாங்கவும் ஆண்டவர் கிருபை செய்தார். அல்லேலூயா. அவருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக!

– திருமதி. **சாந்தி**, திருச்சி

## குடிப்பழக்கம் மாறியது



என் கணவர் 20 வருடமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். ஒருநாள் கூட அவர் குடிக்காத நாளே கிடையாது. கடந்த வருடம் அக்டோபர் மாதம் நான் ஜெப விண்ணப்பம் எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றேன். அதற்கு அடுத்த மாதம் ஐயா அவர்கள் பரிமள தைலம் ஒவ்வொருவர் மீதும் வைத்து, ஜெபித்து மங்கள வார்த்தை கொடுத்தார்கள். என் கணவரிடம், ஐயா உங்கள் தலையின் மீது கை வைத்து ஜெபிக்கும்போது என்ன மங்கள வார்த்தை சொன்னார் என்று கேட்டேன்? என் கணவர், "ஐயா என்ன சொன்னார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நான் ஐயாவிடம் "இனி நான் குடிக்க மாட்டேன்"என சொல்லிவிட்டேன்" என்றார். என்ன ஆச்சரியம்! அன்றைக்குப் பிறகு, என் கணவர் குடித்ததே இல்லை. அற்புதமாய் என் கணவருக்கு ஆண்டவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கொடுத்தார். அல்லேலூயா.

என் கணவருக்காக ஜெபித்த சகோதரருக்கும், அற்புதம் செய்த ஆண்டவருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அவருக்கே மகிமை உண்டாவதாக!

– திருமதி. **ஏஞ்சல்**, ஸ்ரீபெரும்புதூர்

## மகளுக்கு குழந்தை பாக்கியமும், மருமகனுக்கு பூரண சுகமும் கிடைத்தது!



என் மகளுக்கு திருமணமாகி இரண்டு வருடங்கள் குழந்தை இல்லாமல் இருந்தது. ஜனவரி 2017-ஆம் வருடம் அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டத்திற்கு வந்து சகோதரரிடம் ஜெபித்துச் சென்றேன். பிப்ரவரி மாதமே என் மகள் கருத்தரித்து, பெண் குழந்தையை பெற்றெடுக்க கிருபை செய்தார். மேலும் என் மருமகனுக்கு 2017-ஆம் ஆண்டு ஸ்பைனல் கார்டில் (Spinal Cord) பெரிய கட்டி வந்தது. அதை ஆப்பரேஷன் மூலம் அகற்ற தேவன் கிருபை செய்தார். இதற்காக ஒவ்வொருநாளும் தேவனின் அன்பு ஜெப கோபுரத்தைத தொடர்புகொண்டு நாங்கள் ஜெபித்துக்கொண்டோம். கர்த்தர் மருமகனுக்கு பூரண சுகத்தை அருளியிருக்கிறார். மருத்துவர்கள், மருமகன் 2 Wheeler ஓட்டக்கூடாது என்றார். கர்த்தருடைய கிருபையினால், மருமகன் ஒரு கார் வாங்க உதவிசெய்தார். தேவனின் அன்பு ஜெப வீரரின் ஜெபத்தைக் கேட்டு, இத்தனை அற்புதங்களையும் எங்கள் குடும்பத்தில் செய்த ஆண்டவருக்கே என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

– திருமதி. **ராஜம்**, சென்னை

## கணவருக்கு பூரண சுகம் கிடைத்தது!



கடந்த சில மாதங்களுக்கு முன்னால் என் கணவர் நெஞ்சுவலியால் உயிருக்காகப் போராடினார். எனக்கு, என் கணவர் உயிரோடு வருவார் என்ற நம்பிக்கையே இல்லாமல் இருந்தது. உடனே நான் தொலைபேசி மூலம் தேவனின் அன்பு ஜெப கோபுரத்தோடு தொடர்புகொண்டு, ஜெபித்துக் கொண்டேன். என்ன ஆச்சரியம்! ஜெப வீரரின் ஜெபங்களைக் கேட்டு, ஆண்டவர் என் கணவருக்குப் படிப்படியாக பூரண சுகத்தை அருளினார். இப்பொழுது என் கணவர் நல்ல சுகபெலத்துடன் இருக்கிறார். நான் கடந்த ஜனவரி மாதம் சகோதரரிடம் ஜெபித்தபோது, "எனக்கு மரண கட்டுகள் விலகும்" என்று மங்கள வார்த்தை கொடுத்தார். அந்த மங்கள வார்த்தை என்னுடைய வாழ்வில் அப்படியே நிறைவேறியது. ஆண்டவர் என் கணவருக்குச் செய்த இந்த பெரிய அற்புதத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அவருக்கே மகிமை உண்டாவதாக.

– திருமதி. **காந்திமதி**, திருச்சி

# மார்வெல் திருமண தகவல் மையம்

அநேகர் என்னிடத்தில் ஜெபிக்க வரும்போது, தங்கள் பிள்ளைகளுடைய திருமண காரியம் இன்னும் நடக்கவில்லை என்று கண்ணீரோடு அழுதுகொண்டு வருவார்கள். அவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்து அனுப்புவேன். அநேக அற்புதங்கள் நடந்திருக்கிறது.

அதோடுகூட இப்பொழுது உங்கள் வசதிக்காக ஜெபித்து, "**மார்வெல் மேட்ரிமோனி**" என்கிற திருமண தகவல் மையத்தை, ஊழியத்தின் ஒரு பகுதியாக தொடங்கியிருக்கிறோம். நீங்களும் ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இது குறித்த விபரங்களை **(www.marvelmatrimony.com)** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். அல்லது எங்களது கைபேசி எண். **7824855999** என்கிற எண்ணிலும் தொடர்புகொள்ளலாம். அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை நகரத்திலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்றும் பதிவுசெய்துகொள்ளலாம். முகவரிகளை தந்துள்ளோம்:

**சென்னை**

எண்.14, ராமலிங்க நகர்,
OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில்
கொட்டிவாக்கம் - 600 041

info@marvelmatrimony.com
www.marvelmatrimony.com

**7824855999**

**மும்பை**

எண்.L-411,, டிரீம்ஸ்-தி-மால்,
எல்.பி.எஸ். மார்க், சாகர் விகார்
அருகில், பாண்டுப் மேற்கு - 400 078

info@marvelmatrimony.com
www.marvelmatrimony.com

**9930737999**

**நாகர்கோவில்**

பாக்கியம் திருமண மண்டப வளாகம்,
எண்: 177, WCC ரோடு, YMCA
எதிர்புறம், நாகர்கோவில் - 629 001

info@marvelmatrimony.com
www.marvelmatrimony.com

**9884480999**

# விருப்பங்கள் நிறைவேறுமா?



சகோதரி.
**ஸ்டெஃபி ஸ்டீபன்**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

ஹலோ பிரண்ஸ்,

இந்த மாதத்திலும் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி. உங்கள் நேரலை வகுப்பு (Online Class) எப்படி போயிட்டிருக்கு? வீட்டிலே நல்ல பிள்ளைகளா இருக்கீங்களா? சரி, இந்த மாதமும் ஒரு குட்டிக் கதையை நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன்.

ஒரு ஊரிலே ஜெரி மற்றும் கெல்சி என்ற அருமையான திருமண தம்பதியர் வாழ்ந்து வந்தனர். ஜெரி ஒரு பெரிய கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். மனைவி கெல்சி இல்லத்தரசியாக (House Wife) இருந்தார்கள். கணவர் பண ஆசையினால் தன் வேலையில் மட்டும் தினமும் கவனம் செலுத்தி வந்தார். ஆனால் தன் மனைவியை சரியாக கவனிப்பதில்லை, அவளிடம் அன்பாக பேசுவதில்லை. இரவு வேலை முடித்து, Late-ஆக வீட்டுக்கு வருவது, கேட்டால், இளம் வயதில்தான் சம்பாதிக்க முடியும் என சமாளித்து விடுவார். இது அவரது மனைவிக்கு பெரிய கவலையாய் இருந்தது. கார், வீடு, சொத்து எல்லாம் இருந்தும், என் கணவர் என்னிடம் அன்பாக பேசவில்லையே, நேரத்தை என்னோடு செலவுபண்ண வில்லையே என்று தினமும் அழுதுகொண்டே தங்களுடைய நாட்களை கடத்தினார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவர்களுக்கு ஒரு அழகான பெண் குழந்தை பிறக்கிறது. பிரசவத்தின்போது ஏற்பட்ட பிரச்சனையினால், மனைவி கெல்சி இறந்துவிடுகிறார்கள். இதை பார்த்ததும் கணவர் ஜெரிக்கு ஒரே கவலை. ஐயோ, இனி யார் என்னையும், என் சிறு குழந்தையையும் கவனிப்பார்கள்? என்று கவலையோடு அமர்ந்திருந்தார்.

ஒருநாள் தன் மனைவியின் டைரி, அவருடைய கண்ணில் பட்டது. அதை எடுத்து படிக்க ஆரம்பித்தார். அதில் அநேக காரியங்களை அவருடைய மனைவி கெல்சி எழுதியிருந்தார்கள். "ஜெரி, நீங்கள் திருமணமானது முதல் வீடு, கார், சொத்து எல்லாவற்றையும் சம்பாதித்து எனக்கு வாங்கிக் கொடுத்தீர்கள். ஆயினும் உண்மையிலேயே நான் உங்களிடம் எதிர்பார்த்த காரியங்கள், இன்னும் உங்களிடமிருந்து எனக்கு கிடைக்கவில்லை. "உங்களோடு தனியாக உட்கார்ந்து அன்பாக பேசவேண்டும், உங்களோடு தனியாக வெளியே சென்றுவரவேண்டும், எனக்குப் பிடித்ததை நீங்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும்". இவைகள் என்னுடைய வாழ்க்கையில் நிறைவேற வில்லை. கடவுள் எப்பொழுது என் விருப்பத்தை நிறைவேற்றுவார்?" என்று கண்ணீரோடு எழுதி யிருந்ததை பார்த்ததும் நொறுங்கிப்போனார் ஜெரி. நான் இவ்வளவு நாட்களும் எனக்காகவும், பணம் புகழுக்காகவுமே வாழ்ந்திருக்கிறேன். என் மனைவி



உயிரோடிருந்த நாட்களில் அவளது உணர்ச்சி களையும், விருப்பங் களையும் நான் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே என்று கதறி அழுதார். இனிமேலும் இப்படி ஒரு நிலை என் குழந்தைக்கு வந்துவிடக்கூடாது என உணர்வடைந்து, தன் குழந்தையோடு அதிக நேரத்தை செலவிட ஆரம்பித்தார்.

எனக்கு அன்பான தம்பி, தங்கைகளே. நீங்கள் கூட ஒருவேளை அப்பா, அம்மா என்னோடு நேரம் செலவிடுவதே இல்லை. வேலை, வேலை என்று போய்விடுகிறார்கள். கேட்டால் உனக்காகத் தான் சம்பாதிக்கிறேன் என்கிறார்கள். என் விருப்பம் அதுவாக இருக்கிறது. ஆனால் நிறைவேற்று வதில்லை என்று இருக்கிறீர்களா? உங்கள் விருப்பங்களை இயேசுவுக்கு தெரியப்படுத்துங்கள். அவர் உங்கள் விருப்பங்களை அறிந்து உங்களுக்கு உதவிசெய்வார். பெற்றோருடைய இருதயத்தை உங்கள் பக்கம் திருப்புவார். அவர்கள் உங்களோடு நேரத்தை செலவிட உதவிசெய்வார். இந்த பொது முடக்க நாட்களிலே (Lockdown) சந்தோஷத்தோடு உங்களுடைய நாட்களை கடத்த கிருபை செய்வார்.

மேற்கண்ட சிறு கதையை கருத்தில் கொண்டு, வேதம் நமக்கு சொல்லும் ஆலோசனை என்ன? ஆண்டவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட்டு, நான் அவருடைய பிள்ளை என்று சொல்லும் எல்லாரும், எப்பொழுதும் தன் சொந்த குடும்பத்தை நன்றாக கவனித்துக்கொள்ள வேண்டும். தன் மனைவி பிள்ளைகளை நன்றாக விசாரிக்க வேண்டும் (1தீமோத்தேயு 3:4,5). அது போல சிறு பிள்ளைகளாகிய நீங்களும் எப்பொழுதும் பெற்றோருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் (எபேசியர் 6:1-3). இதுவே ஆண்டவருக்குப் பிரியம். நாம் ஜெபிப்போமா.

**ஜெபம்:** அன்பின் ஆண்டவரே, சிறு பிள்ளைகளை அணைத்து ஆசீர்வதிக்கிறவரே, இதை வாசிக்கிற சிறு பிள்ளைகளையும், அவர்களது பெற்றோரையும் நீரே ஆசீர்வதியும். சிறு பிள்ளைகள் ஒவ்வொருவரும், தங்கள் பெற்றோரை புரிந்து கொண்டு வாழ கிருபை செய்யும். அவர்களது வாஞ்சைகளை, விருப்பங்களை நிறைவேற்றும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

# கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்!

சகோதரி. **பவ்யா டெரில்**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை





அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்களை மீண்டும் இந்த மாத இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நவம்பர் மாதத்தில் சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இருந்தாலும் ஒருசிலருடைய முகங்களிலே இன்னும் சந்தோஷத்தை பார்க்க முடியவில்லை. ஏனென்றால், எப்பொழுது நான் பழைய நிலைக்குத் திரும்புவேன்? மறுபடியும் நான் எப்பொழுது எழும்பிப் பிரகாசிப்பேன்? என்ற ஒரே கவலை. ஆம், நாம் ஆண்டவருடைய பிள்ளைகளாய் இருக்கிறபடியால், அவர் ஒருபோதும் நம்மை வெட்கப்பட விடமாட்டார். வேதம் சொல்லுகிறது,

**"....கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" (நெகேமியா 8:10)**

இந்த வேத வசனத்தின்படி நான் உங்களுக்கு ஒரு சிறு சாட்சியை உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் பெருமிதம்கொள்கிறேன்.

என்னுடைய நெருங்கிய தோழிக்கு குழந்தை பிறந்து, மூன்று நாட்கள்தான் ஆகியிருந்தது. குழந்தையை பார்த்ததும் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. ஆனால் அந்த சந்தோஷத்தை தொடர முடியாமல், டாக்டர் ஒரு காரியத்தை பகிர்ந்துகொண்டார், "குழந்தைக்கு ஒரு சின்ன பிரச்சனை இருக்கிறது. ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்" என்று சொன்னதும் எல்லோருக்கும் ஒரே கவலை. ஆனால் அந்த குழந்தையின் முகத்தைப் பார்த்தால், முகத்திலே எப்பொழுதும் ஒரு சந்தோஷம், ஒரு புன்சிரிப்பு. அந்த குழந்தையை பார்த்து, அதற்காக ஜெபிக்கும்போது, ஆண்டவர் என் மனதிலே ஒரு வசனத்தை ஞாபகப்படுத்தினார்.

**"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலிப்பியர் 4:4).**

குழந்தை, தன்னையும் அறியாமல் தன் பெற்றோரையும், மற்றவர்களையும் பார்த்து சிரித்துக்கொண்டே இருந்தது. எப்பொழுதும் சந்தோஷமாய் இருந்தது. இது உண்மையிலேயே தேவனுடைய பெரிய அன்பு, அரவணைப்பு என்றுதான் சொல்ல முடியும்.

**பவுலும், சீலாவும்:**

வேதத்தில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை நான் உங்களுக்கு சொல்லட்டுமா! அப்போஸ்தலர் 16-ஆம் அதிகாரத்தில், பவுலும், சீலாவும் தொழுமரத்தில் கட்டப்பட்டு, அநேக அடிகள் அடிக்கப்பட்டு, ஜெயிலில் அடைக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில், நடுராத்திரியில் அவர்கள் ஜெபம் செய்து, தேவனைப் பாடி துதித்தார்கள். காரணம், தேவனுடைய அன்பை அவர்கள் ருசிபார்த்திருந்தார்கள். அவர்கள் இவ்வளவு சந்தோஷத்தோடு பாடி துதித்ததன் காரணம் என்ன?

**முதலாவது, தேவன் தங்களை பாதுகாப்பார் என்பதை நம்பினார்கள்:**

**"நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர் (சங்கீதம் 32:7).**

என்று சங்கீதக்காரன் கூற்றுப்படி, ஆண்டவர் தங்களை எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கிப் பாதுகாப்பார் என்பதை பவுலும், சீலாவும் நம்பினார்கள். ஆகவேதான் அவர்கள் துன்பத்தின் நடுவில் இருந்தாலும், தங்களது இக்கட்டு காலத்தில், கஷ்டம் தெரியாமல், நடு ராத்திரியில் பாடி துதித்தார்கள். தேவன் அவர்களோடு கூட இருந்த படியால், அவர்களுடைய கட்டுகள் எல்லாம் அறுந்துபோயிற்று.

அன்பான வாலிபர்களே, இன்றைக்கு உங்கள் நிலை என்ன? உங்களது கஷ்டமான நேரத்தில் ஆண்டவரை துதிக்கும் பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா? இல்லையேல், இந்த அனுபவத்தை நீங்கள் உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

**இரண்டாவதாக, தேவன் தங்கள் வாழ்வில் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகவே நடப்பிப்பார் என்பதை நம்பினார்கள்:**

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).**

பவுலும், சீலாவும், தேவனிடத்தில் அளவில்லாத அன்பு வைத்திருந்தார்கள். ஆண்டவர் சகலத்தையும் தங்கள் வாழ்வில் நன்மைக்கு ஏதுவாகவே நடப்பிப்பார் என்பதை நம்பினார்கள். ஆகவே தான் அவர்கள் தங்கள் கடினமான சூழ்நிலையை தாங்கிக்கொள்ளத்தக்க கிருபையை தேவன் அவர்களுக்கு கொடுத்தார்.

இதை வாசிக்கிற வலிப தம்பியே, தங்கையே, இன்றைக்கும் உங்கள் வாழ்வில் சோதனை ஏற்படும்போது, ஒருபோதும் ஆண்டவரை நீங்கள் மறுதலிக்காதீர்கள். ஆண்டவர் உங்கள் வாழ்வில் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடப்பிப்பார் என்பதை நம்புங்கள்.

**மூன்றாவதாக, தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய தங்களை முற்றிலும் அர்ப்பணித்தார்கள்:**

**"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" (சங்கீதம் 143:10).**

பவுலும், சீலாவும் ஆண்டவருக்குப் பிரியமானதைச் செய்ய தங்களை முற்றிலும் அர்ப்பணித்தார்கள். ஆகவேதான் சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் எல்லாம் அதிர்ந்தது. கதவுகள் எல்லாம் தானாக திறவுண்டது. அவர்களுடைய கட்டுகளெல்லாம் கழன்று போயிற்று (அப். 16:26). ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டது.

இதை வாசிக்கிற வாலிப பிள்ளைகளே, பவுலைப் போல, சீலாவைப் போல நீங்களும் ஆண்டவருக்கென்று சாட்சியாய் ஜீவிக்க உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? அப்படி நீங்கள் ஒப்புக் கொடுக்கும்போது, ஆண்டவருடைய கிருபை உங்களை சூழ்ந்துகொள்ளும். நன்மையும், கிருபையும் உங்களை தொடரும். நாம் ஜெபிப்போமா.

**ஜெபம்:**

அன்புள்ள ஆண்டவரே, இதை வாசிக்கிற வாலிபப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வரும் சோதனைகளை தாங்கிக்கொள்ள கிருபை தந்தருளும். அவர்கள் வாழ்விலுள்ள கட்டுகளை எல்லாம் அறுத்தெரியும். உலகத்திலே வாழ்கிற நாட்களிலே உமக்குப் பிரியமாய் நடந்து, சந்தோஷமாய் தங்களுடைய நாட்களை கடத்த நீர் கிருபை செய்யும். அவர்களுடைய தேவைகளை நீர் சந்திப்பீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

# தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

## தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

### நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை

Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

### அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

### ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை

Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

### ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை

Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

### ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை

Chennai - Crystal 160

### வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை

Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

### கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu - TCCL 734

# வாரந்தோறும்

| Day | Channel | Living Jesus Tv | Channel |
|---|---|---|---|
| ஞாயிறுதோறும் | Angel TV: 12.00 AM, 12.30 AM, Satellite Channel | 7.30 AM, 8.00 AM \| 1.30 PM, 2.00 PM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| திங்கள்தோறும் | Angel TV: 5.00 AM, 5.30 AM, Satellite Channel | 7.30 AM, 8.00 AM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM \| 1.30 PM, 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | உங்கள் நம்பிக்கை Television: 7.30 AM, 8.00 AM, Satellite Channel |
| செவ்வாய்தோறும் | Angel TV: 5.00 AM, 5.30 AM \| 9.00 PM, 9.30 PM, Satellite Channel | 7.30 AM, 8.00 AM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM \| 1.30 PM, 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,<br>VK Digital 117, Digcon 85, | |
| புதன்தோறும் | Angel TV: 8.00 AM, 8.30 AM, Satellite Channel | 7.30 AM, 8.00 AM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM \| 1.30 PM, 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| வியாழன்தோறும் | ஹெவன் Heaven TV India: 8.30 PM, 9.00 PM, TamilNadu | 7.30 AM, 8.00 AM \| 1.30 PM, 2.00 PM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | Subhavaartha Television: 7.30 AM, 8.00 AM, Satellite Channel |
| வெள்ளிதோறும் | Angel TV: 8.00 AM, 8.30 AM, Satellite Channel | 7.30 AM, 8.00 AM \| 1.30 PM, 2.00 PM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| சனிதோறும் | King of Glory: 7.30 PM, 8.00 PM, Pondicherry | 7.30 AM, 8.00 AM \| 1.30 PM, 2.00 PM \| 8.30 PM, 9.00 PM \| 10.30 PM, 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |

**ANGEL TV DETAILS ( Satellite Channel )**

**SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815**

# எங்கள் சேவைகள்




## 24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

**044 2454 7999**
**99419 50999**

## மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ.T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

prayer@godsloveministries.co.in

**சமூக வலைத்தளம்:**

**Evg.T.Stephen**

**9841040999**


Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

**தேவனின் அன்பு ஊழியங்கள்**

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை - 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in